முருகப்பெருமான் துணை

**மகான் நம்மாழ்வார் அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**15.09.2023**, வெள்ளிக்கிழமை

1. மாதவ ஞானியே அரங்கா
மறுமை பேரிடரை வெல்ல
மேதகு சூட்சும ஞானம் அருளி
மெய் ஞானபலம் தரும் தேசிகா
2. தேசிகனே உன் பெருமை கூறி
தெரிவிப்பேன் அறிவுரை ஆசி
ஆசிதனை சோபகிருது யாளி திங்கள்
அச்சமற இருபான்நவ திகதி புகர்வாரம்
(சோபகிருது வருடம் ஆவணி மாதம் 29 ம் நாள், 15.09.2023, வெள்ளிக்கிழமை)
3. வாரமதில் நம்மாழ்வார் யானும்
வையகம் நலமுற உரைப்பேன்
பாரதம் எங்கிலும் அரங்கன்
பண்பான கொள்கை வளர்ந்துவர
4. வருகவே வினைவழி மக்கள்
வதையாக உயிர்கொலை செய்து
தருமம் மீறி நடந்தாலும்
தானிவர்கள் அரங்கன் கருணைபட
5. கருணைமிக்க அரங்கன் காட்டும்
கந்தனையே காணும் சக்திமிகு
தருமநெறி ஜீவ தயவு நெறிவழி
தாமுரைப்பேன் தொடர்புக்குவர
6. வருகவே தீதான குணமனைத்தும்
வருமுலகில் தானாக விலகி
பெருமை மிக்க செயலாக
பேதம் கருதா வாழ்வுமாக

7. ஆகவே மாற்றம் கூடி
அனைத்து உயிர்களையும்
மிகையாக மதித்துப் போற்றும்
மேலான தன்மை களாகி

8. ஆகியே அரங்கன் மார்க்கத்தால்
அளவிலா சக்தி பெருகி
அகிலத்தையே மாற்றவல்ல
ஆன்மீக ஞானப்படைகளாக

9. ஆகுவர் ஞானிகள் ஆகவே
அனைத்து வழிகளும் தேறி
யுகத்தை மாற்றும் சக்தி
உயர் குரு அரங்கனால் அடைந்து

10. அடைந்துமே கலி மாயையை
அழித்துமே சோதனை பலவும்
தடையற வென்று மீள்வர்
தவசியாக தவராஜன் தேடும்

11. தேடும் ஞானியாக மக்கள்
தேசமெல்லாம் நிரம்பியே
ஈடேற்றம் ஞான ஆட்சிக்கு
இணைந்துமே நிறைவேற்றம் தருவர்

அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—